செ.வெ.எண்-03 நாள்-06.05.2021

# அரியலூர் மாவட்டம்
# கொரோனாபரவலை தடுக்க தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்ட புதிய கட்டுபாடுகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் தகவல்.

தமிழக அரசின் உத்தரவுபடி 01.05.2021 முதல் மறு உத்தரவு வரும் வரை இரவு 10.00 மணி முதல் காலை 4.00 மணி முடிய இருவ நேர ஊரடங்கு அரியலூர் மாவட்டத்தில் அமல்படுத்தப்படும். அத்துடன் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் முழு ஊரடங்கு கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. தமிழக அரசின் உத்தரவுபடி 06.05.2021 காலை 04.00 மணிமுதல் 20.05.2021 காலை 04.00 மணி வரை பின் வரும் புதிய கட்டுப்பாடுகள் கூடுதலாக அரியலூர் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும். அதன்படி அனைத்து அரசு அலுவலகங்களும், தனியார் அலுவலகங்களும் 50%பணியாளர்களுடன் இயங்கும். அரசு பேருந்துகள், தனியார் பேருந்துகள், பயணியர் இரயில் மற்றும் வாடகை டாக்ஸி ஆகியவற்றில் 50% இருக்கைகளில் மட்டும் பொதுமக்கள் அமர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படுகிறது. 3000 சதுர அடி மற்றும் அதற்கு மேற்பட்டபரப்பு கொண்ட பெரியகடைகள் (Big Format Shops), வணிக வளாகங்கள் (Shopping Complex & Malls) வணிக வளாகங்களில் இயங்கும் பல சரக்குகடைகள் மற்றும் காய்கறி கடைகளும் இயங்க அனுமதி இல்லை.

தனியாக செயல்படுகின்ற மளிகைகடை, பலசரக்குகள் மற்றும் காய்கறிகள் விற்பனை செய்யும் கடைகள் மட்டும் குளிர்சாதனவசதி இன்றி நண்பகல் 12.00 மணி வரை இயங்க அனுமதிக்கப்படுகிறது இவற்றில் ஓரே சமயத்தில் 50 சதவிகிதம் வாடிக்கையாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும். இதரகடைகள் அனைத்தும் திறக்க தடைவிதிக்கப்படுகிறது. மருந்தகங்கள், பால் விநியோகம் போன்ற அத்தியாவசியப் பணிகள் வழக்கம் போல எந்தத் தடையுமின்றி செயல்பட அனுமதிக்கப்படுகிறது. முழு ஊரடங்கு அமலில் உள்ளநாட்கள் உட்பட அனைத்து நாட்களிலும் உணவகங்களில் காலை 6 மணிமுதல் 10 மணிவரையிலும், நண்பகல் 12 மணிமுதல் மதியம் 3 மணிவரையிலும் மாலை 6 மணிமுதல் இரவு 9 மணி வரையிலும் பார்சல் சேவை மட்டும் அனுமதிக்கப்படும். Swiggy, Zomato போன்றமின் வணிகம் (e-commerce) மூலம் உணவு விநியோகம் செய்யும் நிறுவனங்கள் மேற்கண்ட நேரங்களில் மட்டும் செயல்பட அனுமதிக்கப்படுகின்றது. மற்றமின் வணிக (e-commerce) நிறுவனங்களின் சேவைகளுக்கு ஞாயிற்றுக் கிழமைகளில் அனுமதி இல்லை.

தேநீர் கடைகள் நண்பகல் 12 மணிவரைமட்டும் செயல்பட அனுமதிக்கப்படும். உணவகங்கள் மற்றும் தேநீர் கடைகளில் உட்கார்ந்து உண்பதற்கு அனுமதியில்லை. விடுதிகளில் (Hotels and Lodges) தங்கியுள்ள வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் தங்கியுள்ள அறைகளிலேயே உணவு வழங்க வேண்டும். உணவுக் கூடங்களில் அமர்ந்து உண்பதற்கு அனுமதி இல்லை. சமுதாயம், அரசியல், விளையாட்டு, பொழுதுபோக்கு, கல்வி, கலாச்சாரநிகழ்வுகள் மற்றும் இதர விழாக்களுக்கு தடைசெய்யப்படுகிறது. திரையரங்குகள் செயல்படாது. இறப்பு சார்ந்த நிகழ்வுகளில் 20 நபர்களுக்கு மேல் அனுமதி இல்லை. தமிழகஅரசின் உத்தரவுபடி 01.05.2021 முதல் மறு உத்தரவுவரும் வரை இரவு 10.00 மணிமுதல் காலை 4.00 மணி முடிய இரவு நேர ஊரடங்கு அரியலூர் மாவட்டத்தில் அமல்படுத்தப்படும்.

அனைத்து பகுதிகளிலும் அழகு நிலையங்கள் (Spas) இயங்க தடைவிதிக்கப்படுகிறது. இரவு நேர ஊரடங்கின் போது அவசர மருத்துவத் தேவைகளுக்கும், விமானநிலையம் / இரயில் நிலையம் செல்ல மட்டும் வாடகை ஆட்டோ, டாக்ஸி மற்றும் தனியார் வாகன உபயோகம் அனுமதிக்கப்படும். அத்தியாவசியப் பணிகளான பால் விநியோகம், தினசரி பத்திரிக்கை விநியோகம், மருத்துவமனைகள், மருத்துவ பரிசோதனைக் கூடங்கள்,மருந்தகங்கள், ஆம்புலன்ஸ் மற்றும் அமரர் ஊர்திசேவைகள் போன்ற மருத்துவத்துறை சார்ந்த பணிகள்,சரக்கு வாகனங்கள் மற்றும் எரிபொருள் வாகனங்கள் (Petrol, Diesel & LPG etc.,) ஆகியவை இரவு ஊரடங்கின் போதும், முழு ஊரடங்கின் போதும் அனுமதிக்கப்படுகிறது.

ஊடகம் மற்றும் பத்திரிகைத் துறையினர் தொடர்ந்து இரவு ஊரடங்கின்போதும், முழு ஊரடங்கின் போதும் செயல்படலாம். பெட்ரோல் மற்றும் டீசல் பங்குகள் (Petrol, Diesel Bunks) தொடர்ந்து செயல்பட அனுமதிக்கப்படும். தொடர் செயல்முறை தொழிற்சாலைகள் (Continuous Process Industries) மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் (Industries Manufacturing Essential Commodities) இரவு நேர ஊரடங்கின் போதும், முழு ஊரடங்கின் போதும் செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் அந்நிறுவனத்தில் பணிக்குசெல்லும் பணியாளர்களும், தனியார் நிறுவனங்களில் இரவுகாவல் பணிபுரிபவர்களும் தொடர்புடைய நிறுவனங்களால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது அனுமதி கடிதம் வைத்திருப்பின் வீட்டிலிருந்து பணியிடத்திற்கு சென்று வீடு திரும்ப அனுமதிக்கப்படுகிறது. தொலைத் தொடர்பு மற்றும் அதனைச் சார்ந்த செயல்பாடுகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்களில் இரவு நேரப் பணிமேற்கொள்ள அனுமதிக்கப்படும். முழு நேர ஊரடங்கின் போதும் இரவுப்பணி அனுமதிக்கப்படும். தரவு மையங்களில் (Data Centres) பராமரிப்புபணி, மருத்துவம்,நிதி, வங்கி, போக்குவரத்து மற்றும் இதரஅத்தியாவசிய பணிகளுக்கு தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு சார்ந்த பணிகள் மேற்கொள்ள இரவு ஊரடங்கின் போதும், முழு ஊரடங்கின் போதும் அனுமதிக்கப்படும்.

கிடங்குகளில் சரக்குகளை ஏற்றுவது, இறக்குவது மற்றும் சரக்குகளை சேமித்து வைப்பது உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள இரவு நேர ஊரடங்கின் போதும், முழு ஊரடங்கின் போதும் அனுமதிக்கப்படும். முழு ஊரடங்கு அமலில் உள்ள நாட்கள் உட்பட அனைத்து நாட்களிலும் திருமணம் / திருமணம் சார்ந்த நிகழ்வுகள் (கலந்து கொள்பவர்கள் எண்ணிக்கை 50 நபர்களுக்கு மிகாமலும்) மற்றும் இறப்பு சார்ந்த நிகழ்கள் (கலந்து கொள்பவர்கள் எண்ணிக்கை 20 நபர்களுக்கு மிகாமலும்) எற்கனவே வெளியிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுடன் அனுமதிக்கப்படும். ஞாயிற்றுக்கிழமைகளில் முழு ஊரடங்கின் போது செயல்பட அனுமதிக்கப்படாத தொழில் நிறுவனங்களில், தீ, இயந்திரம் மற்றும் தொழிலாளர்கள் பாதுகாப்பிற்காக மேற்கொள்ள வேண்டிய பராமரிப்புபணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படும். ஏற்கனவே ஆணையிட்டவாறு சனிக்கிழமைகளில் மீன் மார்க்கெட், மீன் கடைகள், கோழி இறைச்சிகடைகள் மற்ற இறைச்சிகடைகள் செயல்பட அனுமதி இல்லை. இதர நாட்களில் காலை 6.00 மணி முதல் 12.00 மணிவரை மட்டும் செயல்பட அனுமதிக்கப்படுகிறது. அரியலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மூலமாகவும், களப்பணியாளர்கள் மூலமாகவும் இதுவரை 166805 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போதுமொத்தம் 341 பேர் கொரோனா சிகிச்சையில் உள்ளனர். இதில் அரசு மருத்துவமனை மருத்துவகல்லூரியல் 122 பேரும்,கோவிட் கவனிப்பு மையங்களில் 106 நபர்களும், தனியார் மருத்துவமனைகளில் 35 பேரும் மற்றும் வீட்டுத் தனிமைப்படுதல்களில் 78 பேரும் சிகிச்சையில் உள்ளனர். கொரோனா நோய்த்தோற்றால் இதுவரை பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மொத்தம் 5772 பேர் இதில் 5378 பேர் முற்றிலும் குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர். அரியலூர் மாவட்டத்தில் இதுவரை கொரோனா நோய் முதல் கட்ட தடுப்பு மருந்து 32217 நபர்களுக்கும் மற்றும் இரண்டாம் கட்ட தடுப்பு மருந்து 31,024 நபர்களுக்கும் செலுத்தப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் முககவசம் அணியாதது மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றாதது ஆகிய காரணங்களுக்காக இதுவரை மொத்தம் 27,771 நபர்களுக்கு அபராதமாக ரூபாய் 64,74,800/- வசூலிக்கப்பட்டுள்ளது. தேசிய வழிகாட்டு நடைமுறைகளில் குறிப்பிட்டுள்ளபடி, பொது இடங்களில் முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளியினை கடைப்பிடிப்பது, கைகளை அடிக்கடிசோப்பு / கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்வது மற்றும் கூட்டங்களை தவிர்ப்பது உள்ளிட்டவற்றை தொடர்ந்து கட்டாயம் பின்பற்றிட மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**